DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : MC 7/2024
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிர் மனுதாரர் ஆஜர்**

| | |
|---|---|
| Name | விஷ்ணுஶ்ரீ |
| Father / Husband Name | லோகரஞ்சன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **25.05.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** எதிர்மனுதாரர் 25.02.2023 ம் தேதி என்னை அழைத்து செல்ல எனது வீட்டிற்கு வந்தபோது நான் செல்ல மறுத்தேன் என்றால் சரியல்ல. அவர் எனது பெற்றோரின் பெயரில் உள்ள சொத்தினை எதிர்மனுதாரர் பெயருக்கு மாற்றினால் தான் அழைத்து செல்வேன் என்று கூறினார். எனது பிரமாணவாக்குமூலத்தில் மேற்படி விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடந்த 26.03.2023 ம் தேதி எதிர்மனுதாரர் அவரது பெற்றோருடன் என்னை அழைத்து செல்ல என் வீட்டிற்கு வந்தபோது நான் வீட்டில் இல்லை என்றால் சரிதான். நான் எனது அக்காவின் வீட்டில் இருந்தேன். மேற்படி தேதியில் நான் எனது செல்போனை எனது வீட்டிலேயே வைத்துவிட்டு சென்றிருந்தேன் என்றால் சரிதான். நான் அரக்கோணத்தில் உள்ள எனது அக்காவீட்டிற்கு சென்றிருந்தால் மேற்படி மனுதாரர் எனது வீட்டிற்கு வந்த விவரத்தினை எனது பெற்றோர் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் சொல்லி இருப்பார்கள் என்றால் எதிர் மனுதாரர் எனது அக்காவின் கனவருக்கு போன் செய்து நான் அவர்களுடன் தான் இருந்தேன் என்று கேட்டார். மேலும் அவர் மேற்படி தேதியில் திடீரென்று வந்ததால் அவர் சென்றபின்னர் என் பெற்றோர் மேற்படி தகவலை எனக்கு சொன்னார்கள். மேற்படி விவரத்தை எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக மேற்படி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 26.03.2023 ம் தேதி எதிர்மனுதாரர் எனது வீட்டிற்கு வந்தபோது எனது பெற்றோர் நான் அவர்களிடம் சொன்ன குற்றச்சாட்டுகளை அவரிடம் கேட்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

2. நான் பிரமாணவாக்குமூலத்தில் 26.03.2023 ம் தேதி எதிர்மனுதாரர் என்னை அவதூராக பேசியதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி தேதியில் எனது அக்காவீட்டில் நான் இல்லை என்பதால் தான் எதிர்மனுதாரராலும் எனது பெற்றோராலும் என்னை தொடர்பு கொள்ள முடியவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தினத்தில் எதிர்மனுதாரரை கால அவகாசம் கேட்டு எனது பெற்றோர் அவரை திருப்பி

அனுப்பிவிட்டனர் என்றால் எதிர்மனுதாரர் என்னை அவதூராகவும் எனக்கு மேலும் சீர்வரிசையாக கொடுப்பதாக சொன்ன 68 சவரன் நகையை கேட்டார். அதனால் எனது பெற்றோர் அவரிடம் கால அவகாசம் கேட்டார்கள். கூடுதலாக கேட்கப்பட்ட 68 சவரன் நகையை கேட்ட விவரம் உண்மை எனில் அது குறித்து எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றாலும் வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 08.04.2023 ம் தேதி எதிர்மனுதார் எனது பெற்றோருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியபோதும் எனது பெற்றோர் என்னை அவருடன் அனுப்பிவைப்பதாக சொன்னார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி தேதியில் எதிர்மனுதாரர் என்னை தொடர்பு கொண்டு அழைத்த போது நான் அவரிடம் வரமுடியாது என்றும் நான் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல.

3. சரண்யா என்பவர் எனது உறவினர் பிரபாகரன் என்பவரின் மகள் என்றால் சரிதான். 23.10.2023 ம் தேதி எதிர்மனுதாரரின் தந்தை என் வீட்டிற்கு வந்து மேற்படி சரண்யா என்பவரை அவதூராக பேசினார் என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சரண்யா என்பவர் கொடுத்த புகாரை உண்மை இ ல்லை என்பதால் தான் காவல் நிலையத்தில் மேற்படி புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சரண்யா எனது வாழக்கை பாதிக்க கூடியாது என்பதால் புகாரை திரும்ப பெற்றுகொண்டார். மேற்படி புகார் பொய் என்பதால் தான் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட ஒப்புகை ரசீது மற்றும் புகாரின் நகலையும் என்னால் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பப்பட்டதை முறியடிப்பதற்காகதான் மேற்படி சரண்யா என்பவர் மூலம் காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு எதிரில் குடியிருக்கும் சேகர் செட்டியார் என்பவரை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 5 1/2 வருடங்கள் இருக்கும். நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் என் வீட்டின் அருகே வசிக்கும் சேகர் செட்டியார் என்பவர் மூலமாக தனக்கு விவாகரத்து வழங்க வேண்டும் என்று எதிர் மனுதாரர் பத்திரம் தயார் செய்து கொண்டு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் விவாகரத்து சம்மத பத்தரம் தான் மேற்படி பத்திரமா என்றால் ஆமாம். **(மேற்படி ஆவணம் எமசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி ஆவணம் நான் சொல்லிதான் எதிர்மனுதாரரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தந்தை சென்னை மாண்புமிகு உயர்நீதி மன்றத்தில் விவாகரத்து குறித்து வழக்கு தொடுத்துள்ளோம் அது நம்பராகி வந்துவிடும் என்று கூறி எனது சீர்வரிசை நகைகளை திருப்பி தந்துவிடுவோம் என்றும் மேற்படி பத்திரத்தில் கையொப்பம் செய்து கொடுக்குமாறு சேகர் செட்டியார் என்பவர் மூலமாக எனது தந்தையிடம் பேசினார். எனது தந்தை அதற்கு மறுத்துவிட்டார். பின்னர் 18.11.2023 ம் தேதி மேற்படி எதிர்மனுதாரரின் தந்தை மற்றும் அவருடம் 4 அடியாட்கள் வந்து எங்களை மிரட்டி கையொப்பம் செய்யுமாறு சொன்னார்கள். நான் கையொப்பம் செய்யவில்லை.

4. மேற்படி சம்பவம் குறித்து நான் 19.11.2023 ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்புகை ரசீது தான் புகார் கொடுத்ததற்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். **(மேற்படி ஆவணம் எமசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிர்மனுதாரரின் தந்தை என்னை நான் சொல்வது போல் மிரட்டவில்லை என்பதால் தான் அவர் மீது நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஜோசப் மற்றும் சேகர்

என்பவர்களின் மீது கொடுத்த புகார் உண்மையில்லை என்பதால் தான் மேற்படி புகாரின் மீது காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எமசாஆ 3 ஆவணத்தை வழக்கறிஞராக உள்ள எனது அக்காவின் மாமனார் G.M.R. ரவீந்திரன் என்பவரிடம் காண்பித்து ஆலோசனை பெற்று கையொப்பம் செய்வதாக சொல்லி அதனை நானே வைத்துக்கொண்டு தற்போது DVC வழக்கில் பொய்யாக அதனை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மாண்புமிகு பாண்டிச்சேரி மாவட்ட முதன்மை நீதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதமானது என்னால் நோட்ரி முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரிதான். (**மேற்படி எமசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5. மேற்படி ஆவணத்தில் எதிர் மனுதாரரும் அவரது பெற்றோரும் என்னிடம் பரஸ்பர முறையில் விவாகரத்து பெற்றுவிட வேண்டு என்று சில அடியாட்களுடன் எனது வீட்டிற்கு வந்த வெற்று பத்திரத்தில் என்னை கையெழுத்து போடும்படி மிரட்டியதாக உள்ளது என்றால் மேற்படி அவர்கள் கொண்டு வந்த ஆவணங்களில் வெற்று தாள் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி எமசாஆ 5 ஆவணத்தை குறித்து நான் பிரமாணவாக்குமூலத்திலும் தற்போதும் முறன்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பணிபுரியும் அலுவலகத்தின் உயர் அதிகாரியிடம் பொய்யான தகவலை சொல்லி அவரின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முயற்சி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது உடைமைகள் எதுவும் எதிர் மனுதாரரின் வீட்டில் இல்லை என்பதால் எதிர் மனுதாரர் சேகர் செட்டியார் என்பவரின் மூலமாக எனது உடைமையை கொடுப்பதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் 18.11.2023 ம் தேதி எதிர்மனுதாரர் வழக்கறிஞர் ஒருவர் மற்றும் அடியாட்களுடன் வந்து என்னை கையெழுத்திட மிரட்டிவிட்டு சென்றதாக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்து அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 19.11.2023 ம் தேதியிட்ட CSR தாக்கல் செய்துள்ளேன்.

6. மேற்படி நான் கொடுத்த புகார் பொய் என்பதால் தான் மேற்படி புகார் மீது காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சேகர் செட்டியார் என்பவர் எனக்காக சாட்சி சொல்ல வேண்டும் என்பதால் அவர் மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. விவாகரத்து சம்மத பத்திரம் எமசாஆ 3 நான் சொல்லிதான் சேகர் செட்டியார் தயார் செய்தார் என்றால் சரியல்ல. எமசாஆ 1 ஆவணத்தை எதிர்மனுதாரரின் தாயார் பணிபுரியும் திட்ட மற்றும் ஆராய்ச்சி பணித்துறைக்கு ஒரு நகல் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி பொய்யான தகவலை மேற்படி எதிர் மனுதாரரின் தாய் பணிபுரியும் அலுவலகத்திற்கு அனுப்பி அவருக்கு மனஉலைச்சலை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிர் மனுதாரரின் தாயார் புதுவை தலைமைச்செயலகத்தில் பணிபுரிவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர் மனுதாரரின் தாயார் திட்ட மற்றும் ஆராய்ச்சி துறையில் தான் பணிபுரிகிறார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக திட்டமிட்டு அவர் அதிகாரம் மிக்க வேலை செய்கிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி அவர் பணிபுரியும் துறை புதுவை தலைமைச்செயலகத்தின் கீழ் வரும். 2023 ம் வருடம் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் எதிர் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ முயற்சி செய்த பின்னர் தான்

அதனை தடுக்கம் பொருட்டு நான் புதுவை முதலமைச்சர் துணைநிலை ஆளுநர் மற்றும் காவல் நிலையங்களில் புகார் கொடுக்க ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல.

7. எதிர்மனுதாரர் என்னை நல்ல முறையில் பார்த்துக்கொண்டதால் தான் நான் அவரை பிரிந்து சென்ற 12.02.2023 முதல் அக்டோபர் 2023 ம் வரை அவர் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் வரதட்சணை கேட்டதாலும் எனது பெற்றோர் அவரிடம் கால அவகாசம் கேட்டனர். பின்னர் அவர் எங்கள் வீட்டின் அருகே உள்ள அனைவரும் என்னை பற்றி வேறு ஒருவருடன் நான் சென்றுவிட்டதாக அவதூறாக பேசியதால் அவர் மீது புகார் கொடுக்க ஆரம்பித்தோம். மேற்படி விவரம் உண்மை எனில் அது குறித்து எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தந்தையின் பெயரில் உள்ள சொத்து எனது தந்தைக்கு பிறகு எதிர் மனுதாரருக்கு சேரும் என்று அவர் கூறியுள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு இந்த மனு தாக்கல் செய்த நாள்வரை எனது தந்தையின் பெயரில் உள்ள சொத்து விவரம் குறித்து அவருக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் படிப்பு சான்றிதழ்கள் அனைத்தும் எதிர் மனுதாரரிடம் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சான்றிதழ்கள் அனைத்தையும் 02.12.2023 ம் தேதி அன்று என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். வில்லியனூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தார். மேற்படி எதிர் மனுதாரர் சான்றிதழ்கள் கொடுத்த விவரங்கள் எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

8. மேற்படி எனது படிப்பு சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டு அது குறித்து நான் தாக்கல் செய்த புகார் மனு மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லாமல் அவர் மீது பொய்யான வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேல்மருவத்தூரில் உள்ள விஷ்ணு இல்லம் என்ற வீட்டின் மூலமாக எனக்கு மாதம் ரூபாய் 20000 வருவதால் தான் அதனை மறுத்து எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த சொத்து மற்றும் கடப்பாடுகளில் மாதாந்திர வீட்டு செலவிற்காக ரூபாய் 22 ஆயிரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். DVC ல் நான் தாக்கல் செய்த சொத்து மற்றும் கடப்பாடுகளில் மாதாந்திர வீட்டு செலவிற்காக ரூபாய 11 ஆயிரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். **(மேற்படி DVC ல் தாக்கல் செய்த சொத்து மற்றும் கடப்பாடு ஆவணம் எமசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி எமசாஆ 6 ஆவணத்தில் மாதாந்திர செலவு ரூபாய் 30 ஆயிரம் என்றும் MC ல் தாக்கல் செய்த சொத்து மற்றும் கடப்பாடுகளில் மாதாந்திர செலவு ரூபாய் 24700 என்று குறிப்பிடுள்ளேன் என்றால் சரிதான். ஜீவனாம்சம் மனு தாக்கல் செய்ததில் இருந்து இன்றுவரை மேற்படி செலவிற்கான தொகையை நான் எங்கிருந்து பெறுகிறேன் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

9. எதிர்மனுதாரரிடம் இருந்து பராமறிப்பு தொகையை பெற்று தான் என்னால் வாழ முடியும் என்ற சூழ்நிலையில் நான் இல்லை என்பதால் தான் மேற்படி முறண்பட்டு செலவு தொகையை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மருத்துவ செலவு கேட்டு DVC ல் ரூபாய் 4 ஆயிரமும் MC ல் ரூபாய் 2 ஆயிரமும் கேட்டுள்ளேன் என்றாலும் சரிதான். எனது உடல் நிலையில் எந்த குறைபாடும் இல்லை என்பதால் தான் அது குறித்து எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மூச்சுத்தினரல் மற்றும் அடிக்கடி காய்ச்சல் வரும் என்பதாலும் அதற்கான செலவுகளை நான் தான் பார்த்துக்கொள்கிறேன். மேற்படி மூச்சுத்தினறல் எப்போதில்

இருந்து எனக்கு இருக்கிறது என்றால் எனது சிறுவயதில் இருந்தே இருந்து வருகிறது. மேற்படி மூச்சுத்தினறலுக்காக சிகிச்சை எடுத்துக்கொண்ட மருத்துவ ரசீது ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வேலைக்கு விண்ணப்பிப்பதற்காக விண்ணப்ப செலவாக ரூபாய் 2 ஆயிரம் கேட்டுள்ளதால் எந்த நிறுவனத்தில் விண்ணப்பிப்பதற்காக மேற்படி தொகையை கேட்டுள்ளேன் என்றால் எனது மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. தேவை ஏற்பட்டால் சமர்ப்பிக்கிறேன். நான் தாக்கல் செய்த சொத்து மற்றும் கடப்பாடுகளில் எனது குடும்பத்தின் வருமான நிலையினை MC ல் LOWER MIDDLE CLASS என்றும் DVC ல் UPPER MIDDLE CLASS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஜீவனாம்ச மனுவில் LOWER MIDDLE CLASS என்று ஜீவனாம்ச தொகையை பெறுவதற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

10. எதிர் மனுதாரர் மாதம் ரூபாய் 1 லட்சம் சம்பாரிப்பதற்கான அவரின் சம்பல பட்டியல் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர் மாதம் நிகர வருமானமாக ரூபாய் 20 ஆயிரம் பெறுகிறார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு 1 கோடி க்கு சொத்து உள்ளதாக மனுவில் சொல்லியுள்ளது உண்மை எனில் மேற்படி அவருக்கு எங்கு எவ்வளவு சொத்து அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள DVC ல் எதிர் மனுதாரருக்கு ரூபாய் 2 கோடி சொத்து உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். **(மேற்படி மனு எமசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் எதிர்மனுதாரரிடம் பணம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் மேற்படி பொய்யாக அவருக்கு சொத்து மதிப்பு உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் DVC ல் தாக்கல் செய்த சொத்து மற்றும் கடப்பாடுகளில் ரியல் எஸ்டேட் குறித்து குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் எந்த சொத்தும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு மருவூர் அவென்யூவில் உள்ள சொத்து குறித்து நான் தாக்கல் செய்துள்ள இரு வழக்குகளிலும் சொத்து மற்றும் கடப்பாடுகளில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி மருவூர் அவென்யூவில் உள்ள சொத்தினை தவிர எனக்கு வேறு எங்கும் சொத்துள்ளதா என்றால் இல்லை. MC ல் தாக்கல் செய்து சொத்து மற்றும் கடப்பாடுகளில் வங்கி விவரம் குறித்து பின்னிட்டு சொல்வதாக காலம் எண் 18 ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 08.01.2025 ம் தேதி எதிர் மனுதாரரால் எனது வங்கி கணக்கு மற்றும் எனது சொத்து மற்றும் கடப்பாடுகளில் சரியான விவரத்தை கேட்டு தாக்கல் செய்ய மெமோவிற்கு நான் எந்த பதிலும் தற்போது வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. 19.01.2023 ம் தேதி செய்யூர் சார்பதிவாளர் சரகத்திற்கு உட்பட்ட காட்டுதேவதூர் என்ற இடத்தில் விவசாய நிலத்தை ரூபாய் 16,00700 மற்றும் 305500 நான் விற்றுள்ளேன் என்றால் இல்லை. 24.01.2023 ம் தேதி வேட்டூர் என்ற கிராமத்தில் ரூபாய் 692050 தொகைக்கு நான் நிலத்தை விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விற்பனை செய்த தொகையின் கையிறுப்பு தெரிந்து விடும் என்பதால் தான் நான் எனது வங்கி கணக்கின் பறிவர்த்தனையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு பேன் நம்பர் மற்றும் போன் நம்பர் இணைக்கப்பட்ட வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. சோத்துப்பாக்கத்தில் சென்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கி ஆகும். மேற்படி வங்கியில் லாக்கர் வசதி உள்ளதா என்றால் இல்லை. எதிர்மனுதாரரின் தந்தை மது கடையில் என்ன வேலை செய்வதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

எதிர் மனுதாரரின் தந்தை பல்வேறு உடல் உபாதைகளுக்கு உட்பட்டதால் அவர் கடந்த 7 மற்றும் 8 வருடங்களாக எந்த பணிக்கும் செல்லவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிர் மனுதாரரின் தந்தை எதிர் மனுதாரரிடம் ஜீவனாம்சம் சார்ந்து உள்ளார் என்றால் சரியல்ல. அவரது மனைவியும் வேலைக்கு செல்கிறார். திருமணத்திற்கு பிறகு எனது அன்றாட தேவைக்களை பூர்த்தி செய்ய தேவையான வீட்டு உபயோக பொருட்களை எதிர்மனுதாரின் வீட்டில் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் வரதட்சணை கேட்டு என்னை கொடுமை படுத்தியதாக கொடுத்த புகாரில் வரதட்சணை தடுப்பு அதிகாரி எதிர் மனுதாரர் என்னை எந்த வரதட்சணையும் செய்யவில்லை என்று சான்று கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

12. 18.09.2024 ம் தேதிக்கு பின்னர் எதிர் மனுதாரர் நான் கொடுத்த புகார் மற்றும் ஆவணங்களை வில்லியனுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கேட்ட போது அதனை கொடுக்க கூடாது என்று நான் ஆட்சேபணை கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஜீன் மாதம் 2022 ல் நான் வாங்கிய கார் தற்போது எனது பயன்பாட்டில் உள்ளதா என்றால் ஆமாம். மேற்படி கார் எனது பெற்றோர் வாங்கியதாகும். எனக்கு 04.01.2023 மற்றும் 11.02.2023 தேதி எதிர்மனுதாரர் எனது செலவிற்காக UPI மூலம் ரூபாய் 2500 மற்றும் ரூபாய் 2000 அனுப்பிய தொகையினை நான் எவ்வாறு கொடுத்தேன் என்றால் எனது பெற்றோர் எனக்கு செலவிற்காக கொடுத்த தொகையினை அவரிடம் கொடுத்தேன். நான் அவ்வாறு பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 11.02.2023 ம் தேதி அதிகாலை நான் எதிர் மனுதாரரின் வீட்டை விட்டு வெளியேற முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. 12 ஆம் தேதி எதிர் மனுதாரரே என்னை அழைத்து வந்து எனது வீட்டில் விட்டுவிட்டார். மேற்படி 12 ஆம் தேதி எதிர்மனுதார் மற்றும் அவரின் பெற்றோர் புதுவை அருகில் உள்ள வழுதாவூரில் உள்ள குலதெய்வம் கோவிலுக்கு என்னை அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். நான் மேற்படி கோவிலுக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்ததும் வீட்டில் இ ருந்த பொருட்களை எறிந்தும் என்னை எனது வீட்டிற்கு அழைத்து செல்லுமாறு கூறினேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர் என்னை அடிக்க வந்தனர். மேற்படி 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் நடந்த விவரம் உண்மை என்பதால் தான் அதனை மறுத்து எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

13. நான் எனது சுய விருப்பத்தின் பேரில் வீட்டை விட்டு வெளியேறிவிட்டு எதிர் மனுதாரர் என்னை கொடுமைபடுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் சுய விருப்பத்துடன் என் வீட்டிற்கு வந்ததால் தான் எனது பெற்றோர் எதிர் மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்களிடம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர் மனுதாரரின் வீட்டை விட்டு வெளியே வரும்போது ஒரு டிரேவல் பேக் எடுத்து வந்தேன் என்று புஷ்கன்தாசன் என்பவர் சொல்லியுள்ளார் என்றால் நான் ஒரு பேக் கொண்டுவந்தேன். மேற்படி பேகில் என்னுடைய புத்தகம் மற்றும் ஆடைகள் மட்டும் கொண்டுவந்தேன். மேற்படி பேகில் எனது உடைமைகளை எடுத்துவந்துவிட்டு தற்போது ஆடைகளை எடுத்து வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்தில் 3 கிலோ வெள்ளி பொருட்கள் எனது பெற்றோர் எனக்கு கொடுக்கவில்லை என்றாலும் சிறிய பூஜா சாமான்கள் தான் கொடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. எதிர் மனுதாரருக்கு ஆடை எடுப்பதற்காக திருமணத்தின் போது எனது பெற்றோர் ரூபாய் 50 ஆயிரம் தொகையை கொடுத்தார்கள் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் ரூபாய் 50 ஆயிரம் தொகையை எதிர்

மனுதாரருக்கு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரும் எங்களது திருமணத்தின் போது எனக்கு ஆடை எடுப்பதற்காக ரூபாய் 75 ஆயிரம் கொடுத்துள்ளார்கள் என்றாலும் அதனை மறைத்து நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. திருமணத்தின் போது எதிர் மனுதாரர் எனக்கு அணிவித்த 7 சவரன் தாலி யாரிடம் உள்ளது என்றால் என்னிம் தான் உள்ளது.

14. நான் புதுவை துணை நிலை ஆளுநரிடம் கொடுத்த புகாரின் பேரில் வில்லியனூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 02.12.2023 ம் தேதி எதிர் மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று எழுதிக் கொடுத்தேன் என்றால் அவர்தான் என்னை கட்டாயப்படுத்தி எழுதிக்கொடுக்க சொன்னார். மேற்படி தேதிக்கு பின்னர் தான் எதிர் மனுதாரர் என் மீது விவாகரத்து வழக்கு தொடர்ந்தார் என்றால் சரியல்ல. நான் திருமணம் நடந்த 1 1/2 மாதங்கள் தான் எதிர் மனுதாரருடன் வாழ்ந்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த 1 1/2 வருடம் கழித்து தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கில் உண்மை இல்லை என்பதால் தான் நான் வீட்டை விட்டு வெளியேறி ஒன்பது மாதங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சீர்வரிசை பொருட்கள் எதிர் மனுதாரரிடம் இல்லை என்பதால் தான் எனது பெற்றோர் அவரிடம் அது குறித்து கேட்கவில்லை என்றால் சரியல்ல. எனது பெற்றோர்களுக்கு மாதம் ரூபாய் 25 ஆயிரம் விவசாயம் மூலம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. நான் மேற்படி விவரத்தினை DVC ல் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரயில்ல. 08.04.2023 ம் தேதி எதிர் மனுதாரர் என்னிடம் செல்போனில் தொடர்பு கொண்டு வாழ விருப்பம் தெரிவித்த போது நான் விருப்பம் இல்லை தற்கொலை செய்து கொள்வேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல.

15. எதிர் மனுதாரர் என்னை நல்ல முறையில் பார்த்துக்கொண்டதால் தான் 10.11.2022 ம் மகாபல்லிபுரம் அழைத்து சென்றார் என்றாலும் 06.12.2022 ம் தேதி கார்த்திகை தீபம் மற்றும் பொங்கல் விழாவினை நல்படியாக பார்த்துக்கொண்டார் என்றாலும் சரியல்ல. எதிர் மனுதாரர் என்னை நல்ல முறையில் பார்த்துக்கொண்டதால் தான் 11.02.2023 ம் தேதி புதுவையில் நடந்த மலர் கண்காட்சிக்கு என்னை அழைத்து சென்றார் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் என்னிடம் பணம் கேட்கும் போது கொடுத்தால் தான் என்னை நன்றாக பார்த்துக்கொள்வார். மேற்படி எனக்கு சீர்வரிசையாக கொடுத்த தங்க நாணயங்களை மாற்றி நகையாக செய்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் PHD படிப்பதற்காக மாதம் ரூபாய் 15 ஆயிரம் கல்வி நிறுவனத்தில் கல்வி உதவித்தொகை கொடுக்கிறார்கள் என்றால் சரிதான். நான் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாததால் மேற்படி சேர்ந்து வாழ கோரி விருப்ப மனு ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாததால் அவரது முகநூல் கணக்கினை துண்டித்தேன் என்றால் சரியல்ல. நான் எனது சுய விருப்பத்தின் பேரில் எதிர் மனுதாரரின் வீட்டினை விட்டு வெளியேறி வாழ்ந்து வருவதால் எதிர் மனுதாரர் எனக்கு சட்டப்படி ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் எதிர் மனுதாரருக்கு பொய்யான மனு தாக்கல் செய்து அவரை மன உலைச்சலுக்கு ஆலாக்கியுள்ளதால் என் மனு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தான் மேற்படி எதிர் மனுதாரரால் மன உலைச்சலுக்கு ஆலாகினேன். எதிர் மனுதாரர்தான் வரதட்சணை கேட்டு என்னை கொடுமைபடுத்தி என்னை எனது பெற்றோரின் வீட்டில் அவரே கொண்டுவந்து விட்டு சென்றார்.